மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.302/2017</u>

2025 ம் ஆண்டு நவம்பர் 05 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.11.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தடம் விடமாட்டேன் என்று சொன்னதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை பொறுத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை வாதி யாரிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் ஒரு பொன்னுசாமி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கி உள்ளார் வாதி எத்தனை ஏக்கர் கிரயம் வாங்கினார் என்றால் சுமார் 4-1/2 ஏக்கர் பூமியை கிரயம் பெற்றார் எந்த காலை எண்ணில் வாதி கிரயம் பெற்றார் என்றால் காலையில் எனக்கு தெரியாது.

2. வாதி கிரயம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் காலை எண்.47 க்கு தென்புறம் தான் உள்ளது என்றால் சரிதான். ஏரித்தடத்திற்கு வடபுறமாக காலை எண்.47 உள்ளது என்றால் இல்லை காலை

எண்.45 தான் உள்ளது. ஏரித்தடத்திற்கு மேல்புறம் தடம் ஆரம்பித்து கிழபுறம் திரும்பி பின்னிட்டு தென்புறம் திரும்பும் தடப்பகுதியில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால், அந்த தடத்தை விட மாட்டேன் என்று சொல்லி கம்பிவேலி போடுவதாக சொன்னதால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கில் பாதை கேட்டுள்ள பகுதியானது காலைஎண். 45 க்கு தென்புறம் உள்ள பகுதி என்றால் இல்லை வடபுறம் உள்ள பகுதிக்குச் சேர்ந்தது நான் வடபுறம் உள்ளதாக சொல்லும் ஏரிதடம் காலைஎண்.45 இல் உள்ளது என்றால் ஆமாம். ஏரித்தடமானது காலை எண்.47 ல் இல்லை என்றால் ஆமாம் காலை எண்.47 ஐ பொறுத்து வாதிக்கு பட்டாவோ வேறு ஆவணங்களோ வாதி பெயருக்கு இல்லை என்றால் ஆமாம் காலை எண்.47 ஐ வாதி ஆக்கிரமிப்பு செய்து அதில் தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்றால் இல்லை காலை எண் 45 இல் தான் வாதி தென்னை மரங்கள் வைத்துள்ளார். காலை எண்.47 பூமி ஏழரை சென்ட் பூமியில் வாதி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கு வாதிக்கு எந்த விதமான எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் பத்திரமும், பட்டாவும் உள்ளது.

4. வாதி அதை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் ஒரு பொன்னுசாமி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார் பட்டா எப்போது வாதிக்கு காலை எண்.47 பொறுத்து கொடுத்தார்கள் என்றால் எப்போது கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. காலை எண்.47 இல் வாதி பொன்னுச்சாமி இடமிருந்து எவ்வளவு பூமி கிரையம் வாங்கினார் என்றால் சுமார் 4–1/2 ஏக்கர் இருக்கும் சரியாக எனக்கு தெரியவில்லை. நான் சாட்சிமளிக்கும் விபரங்களை யார் எனக்கு

சொல்லிக் கொடுத்தார் என்றால் நான் வாதியின் பக்கத்து தோட்டம் என்பதால் எனக்கு அது தெரியும்.

5. நான் சொல்வது போல் க.ச.எண்.45 மற்றும் க.ச.எண்.47 இல் ஏரித்தடம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல எனக்கு நினைவு தெரிந்தது முதல் அந்த தடத்தில் தான் சென்று வருகிறோம். தாவா தடமானது க.ச.எண்.51 க்கு கிழப்புறமாக, தென்வடலாக வந்து பின்னிட்டுக் கிழக்கே திரும்பி பின்னிட்டு தெற்கே திரும்புவது தான் தாவா தடம் என்றால் சரிதான். தாவா சொத்து விவரம் குறித்த பாதை குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது என்றும் க.ச.எண்.47 பூமியில் வாதி எந்த நிலத்தையும் கிரயமாக பெறவில்லை என்றும், சண்முகம் சொல்லிக் கொடுத்தது அடிப்படையில் இந்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும், நிராகரிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.05 19:00:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்